
# திராவிடத்தால் வாழ்கிறோம்

807

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

6

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

# 'மலைக்கள்ளன்'

## மக்களின் உள்ளங்களைக் கொள்ளையடித்த மாவீரன்!

'மலைக்கள்ளன்' இப்படம் 1954 - இல் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் திரைக்கு வந்தது. படத்தின் தயாரிப்பு மற்றும் இயக்கம் கோவை பட்சிராஜா ஸ்டுடியோ ஸ்ரீராமுலு. எம்.ஜி.ஆர் இப்படத்தில் மலைக்கள்ளன், அப்துல் ரஹீம், குமார வீரன் என மூன்று வேடங்களில் தோன்றி நடித்தார். மூலக்கதை நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம். இப்படத்திற்கு திரைக்கதை வசனம் எழுத அழைப்பு வந்த போது தலைவர் கலைஞர் தயங்கி இருக்கிறார்.

ஏனென்றால், “நாமக்கல் கவிஞர் காங்கிரஸ் காரர். சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு அவர் சிறைப்பட்ட காலத்தில் சிறையில் இருந்து, அவர் எழுதிய புதினம் 'மலைக்கள்ளன்'. அவருடைய கதைக்கு நான் வசனம் எழுதினால், சரியாக இருக்குமா? கவிஞரிடம் கேட்டுவிடுங்கள்” என்று கலைஞர் சொல்லியிருக்கிறார். ஏனென்றால், தான் வசனம் எழுதப்போவது புராணக் கதையானாலும், அதிலும் பகுத்தறிவுக் கருத்துகளைப் புகுத்தி, மக்களைச் சிந்திக்க வைத்திடும் வல்லமையும் வழக்கமும் உடையவர் கலைஞர்.

அதேபோல மன்னர்களைப் பற்றிய கதைக்கு வசனம் எழுதும்போது, மன்னராட்சி யின் கொடுமைகளை எடுத்துச் சொல்லி, அத்தகைய கொடிய மன்னராட்சி ஒழிய வேண்டும், மக்களாட்சி மலரவேண்டும் என்று எழுதுவார். மக்களின் உள்ளத்தில் ஜனநாயக உணர்வைத் தட்டி எழுப்பிடும் க(ழ)லகக்காரர் கலைஞர்!

அதனால்தான் காங்கிரஸ்காரரான கவிஞரின் கதையில், தனது சமத்துவ, சமூகநீதிக் கருத்துகளைப் புகுத்தும்போது அவர் வருத்தப்பட்டு விடக்கூடாதே என்ற நாகரீகத்தோடு கலைஞர் அனுமதி பெறச் சொன்னார். 'திரைக்கதை வசனத்தை கலைஞர் எழுதட்டும்' என்று கவிஞர் மகிழ்ச்சியுடன் சொல்லிவிட்டார் என்று கேள்விப்பட்ட பிறகே, இப்படத்திற்கான திரைக்கதை வசனத்தைக் கலைஞர் எழுதினார். இந்தத் தகவலை 'நெஞ்சுக்கு நீதி' நான்காம் பாகத்தில் பதிவு செய்துள்ளார்.

அந்தப் படம், தென்னகத்திலே மட்டுமல்லாமல் வட இந்திய மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு, மாபெரும் வெற்றி பெற்றது, என்கிற விவரத்தையும் தலைவர் கலைஞர் தனது 'நெஞ்சுக்கு நீதி'யில் பதிவு செய்துள்ளார்.

### கதைச் சுருக்கம்

படத்தின் கதை மிகச் சுருக்கமானதுதான். சொக்கேச முதலியார் (டி.பாலசுப்ரமணியம்) மகள் பூங்கோதை (பானுமதி) மீது அவளது மாமன் மகனும் ஊர் பிரசிடென்டுமான வீரராஜன் (ஸ்ரீராம்) ஆசைப்படுகிறான். ஆனால், அவனொரு காமுகன் என்பதால், சொக்கேச முதலியாரும் பூங்கோதையும் அவனை வெறுக்கின்றனர். அதனால், வீரராஜன் தனது அடியாள் காத்தவராயன் (சகாதேவன்) மூலம் ஒரு நாள் இரவு பூங்கோதையைக் கடத்தி வரச் செய்கிறான். ஆனால், வழியிலேயே மலைக்கள்ளன் (எம்.ஜி.ஆர்.) பூங்கோதையை மீட்டு அழைத்துச் சென்று தனது குகையில் தங்க வைக்கிறான். அங்கு அவனது சிற்றன்னையான சின்னி (சந்தியா) பூங்கோதையை அன்போடு கவனித்துக் கொள்கிறாள். மலைக்கள்ளனுக்கும் பூங்கோதைக்கும் இடையே, நாளடைவில் காதல் ஏற்படுகிறது.



படங்கள் உதவி : ஞானம்





சொக்கேச முதலியார் தனது மகளைக் காணவில்லை எனக் காவல் நிலையத்தில் புகார் அளிக்கிறார். சப் இன்ஸ்பெக்டர் (எம்.ஜி.சக்கரபாணி) மற்றும் ஏட்டு கருப்பையா (டி.எஸ்.துரை ராஜ்) இருவரும் பூங்கோதையைக் கடத்தியது யார் எனத் துப்புத் துலக்குகின்றனர்.

அவர்களுக்கு உள்ளூர் பெரிய மனிதர் அப்துல் ரஹீம் (எம்.ஜி.ஆர்.) பல வகையில் உதவுகிறார். ஒரு சில நாள்களில் மலைக்கள்ளன், பூங்கோதையை அவளது வீட்டுக்கு அனுப்பி வைக்கிறான். வீரராஜன் தனது காதலி ஜானகியிடம் பொய் சொல்லி அவளை ஏமாற்றி, பூங்கோதையை அழைத்து வரச்செய்து, பூங்கோதையிடம் தவறாக நடந்து கொள்ள முயற்சிக்கிறான். அதனைத் தடுக்கும் ஜானகியைக் கொலைசெய்வதுடன், பூங்கோதையைப் பலாத்காரம் செய்ய முற்படுகிறான். அப்போது மலைக்கள்ளன் வந்து பூங்கோதையைக் காப்பாற்றுகிறான்.

வீரராஜனும் குட்டிப்பட்டி ஜமீன்தாரும் (எஸ்.எம்.திருப்பதிசாமி) காத்தவராயனும் சேர்ந்து சொக்கேச முதலியாரைக் கடத்தி ஜமீன் பங்களாவில் அடைத்து வைத்து, பூங்கோதையை வீரராஜனுக்கு மணம் முடித்துத் தரும்படி கட்டாயப்படுத்துகின்றனர். அவர் மறுக்கிறார். சப் இன்ஸ்பெக்டரும் அப்துல் ரஹீமும் சேர்ந்து, ஜமீன் பங்களாவுக்குப் போய் காத்தவராயன் வீரராஜன் ஜமீன்தார் ஆகியோருடன் சண்டை போட்டு எதிராளிகளைக் கைது செய்து, முதலியாரை மீட்டு வருகின்றனர்.

மலைக்கள்ளன் அதுவரைக் கொள்ளையடித்த நகைகளை எல்லாம் உரியவர்களிடம் கொடுத்துவிடுங்கள் எனச் சொல்லித் தந்ததாக அப்துல் ரஹீம், சப் இன்ஸ்பெக்டரிடம் நகைகளை ஒப்படைக்கிறான். மலைக்கள்ளனால் கொலை செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டவர்கள் அனைவரும் உயிரோடு வந்து விடுவதாலும், மலைக்கள்ளன் மீதான வழக்குகள் ரத்து செய்யப்படுகின்றன. அப்துல் ரஹீம், பூங்கோதையையும் முதலியாரையும் கொடியவர்களிடம் இருந்து மீட்டுக் கொடுத்ததற்குப் பரிசாக பூங்கோதையைத் தனக்குத் திருமணம் செய்து தருமாறு வேண்டுகிறான். முதலியாரும் அவரது அக்காள் காமாட்சியம்மாளும் (பி.எஸ்.ஞானம்) மறுக்கின்றனர். அப்துல் ரஹீம் தனது வேடத்தைக் கலைத்து, நான் குமார வீரன் சிறுவயதில் தொலைந்து போன முதலியாரின் அக்கா காமாட்சியின் மகன் என்று கூறுகிறான். அனைவரும் மகிழ்ந்து, பூங்கோதையை மலைக்கள்ளனுடன் சேர்த்து வைக்கப் படம் நிறைவடைகிறது.

### நுட்பமான வசனங்கள்

இப்படத்தில், கலைஞர் மிக நுணுக்கமாகப் பல்வேறு விசயங்களைப் பேசுவதைக் காண்கிறோம். சமூகத்தில் அன்று பெரிய மனிதர்களாக மதிக்கப்படக் கூடியவர்களாக இருந்த ஜமீன்தாரும், பணக்காரப் பிரசிடென்ட்டும் மிக மோசமான சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களாகவும் அதே நேரம் திருடர்கள், கொள்ளையர்கள் என்று சமூகத்தால் இழித்தும் பழித்தும் வெறுக்கப்படும் மனிதர்களில் பலர், அறத்தோடு வாழ்பவர்களாகவும் இருக்கலாம் என்பதை குட்டிப்பட்டி ஜமீன்தார் மற்றும் வீரராஜன் ஆகிய கதாபாத்திரங்களின் பேச்சு, செயல் மூலமாகவும் மலைக்கள்ளனுக்கு எழுதிய வசனங்கள் வாயிலாகவும் கலைஞர் எடுத்துக்காட்டுகிறார்.

பூங்கோதையை வீரராஜன் கடத்தி வந்து பலாத்காரம் செய்ய முற்படும்போது, அங்கு காப்பாற்ற வரும் மலைக்கள்ளனைப் பார்த்து, 'வீரராஜன் யாரடா நீ?' என்று கேட்க, மலைக்கள்ளனோ 'கற்புக்கரசியைக் காக்க வந்த கடவுள், துஷ்ட, நிக்ரக இஷ்ட பரிபாலனம் செய்ய வந்த ஆண்டவன் எடுத்த அவதாரம் என்றெல்லாம் எண்ணாதே. நான்தான் மலைக்கள்ளன்!' என்கிறான். இவ்வாறு எடுத்துச் சொல்ல ஏராளமான வசனங்கள் உள்ளன.

அடுத்து இத்திரைப்படத்தில் காணப்படும் மிக முக்கியமான சிறப்பம்சம் ஒன்றைப் பற்றியும் குறிப்பிட வேண்டும். 1960-1980-களில் வந்த தமிழ்த் திரைப்படங்களில் ஒரு காட்சியை நாம் பார்க்கலாம். இந்து, இசுலாமியர், கிறிஸ்தவர் ஆகிய மூன்று மதத்தவரும் ஒற்றுமையுடன் இணக்கமாக வாழ்வதான காட்சிகள் பல படங்களில் இடம் பெற்றிருப்பதை நாம் காணலாம்.

1990-களுக்குப் பிந்தைய திரைப்படங்களில் வெளிப்பட்ட மதச் சிறுபான்மையினர் மீதான வெறுப்பு அப்போது கிடையாது. 'மலைக்கள்ளன்' திரைப்படத்தில் இன்னும் ஒரு படி மேலே போய் கதாநாயகன் (எம்.ஜி.ஆர்.) படம் முழுவதும் அப்துல் ரஹீம் எனும் முக்கியமான இசுலாமியக் கதாபாத்திரத்தில் தோன்றி, கதையை நகர்த்தியும் செல்கிறார்.

...காட்சி விரியும்

## வளர்ச்சியில் புதிய உச்சம் தொடும் தமிழ்நாடு!

தமிழ்நாடு அரசின் பொருளாதார ஆய்வறிக்கையில் எதிர்பார்க்கப்பட்ட 8 சதவிகித வளர்ச்சி, மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் (Madras School of Economics) ஆய்வறிக்கையில் உத்தேசிக்கப்பட்ட 9.3 சதவிகிதம் வளர்ச்சி என்பதைத் தாண்டி, 2024-2025 நிதியாண்டில் 9.69 சதவிகிதம் என்கிற பிரம்மாண்ட வளர்ச்சியை, 'திராவிட மாடல் அரசு' சாத்தியப்படுத்தி உள்ளது. இந்த வளர்ச்சி, இந்தியாவில் மற்றெந்த மாநிலங்களிலும் காணப்படாத உச்சம் என்று சமீபத்தில் ஆய்வறிக்கைகள் வெளியாகின.

அதன் தொடர்ச்சியாக, மாநிலத்தில் உற்பத்தியாகும் பொருட்கள் மற்றும் சேவைகளின் மொத்த மதிப்பிலும் (GSVA) மற்ற மாநிலங்கள் எட்ட முடியாத வளர்ச்சியை, தமிழ்நாடு பதிவு செய்திருப்பதாக 'பிசினஸ் லைன்' ஊடகம் தெரிவித்துள்ளது. ஒன்றிய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறை அமைச்சகத்தின் தரவுகளின் அடிப்படையில், இதனைத் தெரிவித்துள்ள பிசினஸ் லைன் ஊடகம், “தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் பொருட்கள் மற்றும் சேவைகளின் மொத்த மதிப்பு 12.7 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. இதன் தேசிய சராசரியே 7.3 சதவிகிதமாகத்தான் உள்ளது” எனத் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, உணவகங்கள் துறை 14.8 சதவிகிதமும், ரியல் எஸ்டேட் துறை 13.6 சதவிகிதமும் அதிக வளர்ச்சி கண்டுள்ளன. கடந்த 13 ஆண்டுகளில் தமிழ்நாடு தொடாத புதிய உச்சம் இது. மற்ற மாநிலங்களைப் பொறுத்தவரையில், கர்நாடகாவில் உற்பத்தியாகும் பொருட்கள் மற்றும் சேவைகளின் மொத்த மதிப்பு 8.9 சதவிகிதமாகவும், மகாராஷ்டிராவில் உற்பத்தியாகும் பொருட்கள் மற்றும் சேவைகளின் மொத்த மதிப்பு 7.8 சதவிகிதமாகவும் மட்டுமே உள்ளன.

திராவிட மாடல் ஆட்சி, தமிழ்நாட்டை புதிய உச்சத்திற்கு உயர்த்திக் கொண்டிருக்கிறது. அந்த வளர்ச்சிக்கு இந்தியத் துணைக்கண்டத்தில் எந்த மாநிலத்தாலும் ஈடுகொடுக்க முடியவில்லை என்பதே இப்புள்ளிவிவரங்கள் உணர்த்தும் செய்தி.

## ஃப்ளாஷ்பேக்





திருப்பூர்
சு.சிவபாலன்

### தலைவர் கலந்துகொண்ட பொதுக்கூட்டம்!

1987-ஆம் ஆண்டு திருப்பூர் நகர தி.மு.கழகம் சார்பில், குமார் நகரில் அன்றைய அ.தி.மு.க. அரசைக் கண்டித்து, பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. எனது தலைமையில், நடைபெற்ற அந்த பொதுக்கூட்டத்தில், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். அத்தகைய தருணத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம்..

**– திருப்பூர் சு.சிவபாலன், முன்னாள் நகர தி.மு.க. பொறுப்பாளர், திருநீலகண்டபுரம், திருப்பூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## நினைவுக் குறிப்பு: ம.ஊருக

### மழையிலும் நிறுத்தப்படாத மாநாடு!

1953-ஆம் ஆண்டு, கழகம் நடத்திய லால்குடி அரசியல் மாநாட்டில், இரண்டாம் நாளில் கனமழை பெய்தது. மழையையும் பொருட்படுத்தாது பல்லாயிரக்கணக்கான மக்கள் தலைவர்களது உரைகளைக் கேட்டனர். தரையில் மழை நீர் ஆறாக ஓடியது. மழை நின்றபின்னர் கூட்டத்தை நடத்தலாம் என அறிவித்தாலும், 'நிறுத்த வேண்டாம் தொடர்ந்து நடத்தவும்' எனத் தொண்டர்கள் முழக்கமிட்டனர். அதன்பின்னர், அண்ணா உரையாற்றத் தொடங்கி, அதைக் கேட்டு முடித்த பின்னரே மக்கள் கலைந்தனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131